**தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்**

**Tamil Study Centre, Homebush Inc.**

**Postal Address: P O Box 4019, Homebush NSW 2140**

**www.tsch.org.au** **info@tsch.org.au**


# ஆண்டிறுதிப் பரீட்சை 2016

**ஆண்டு: 7** **திகதி: 26 - 11 - 2016**

**ஆசிரியர்: திருமதி சாந்தி விஜயநாதன்**

**மாணவர் பெயர்:**

| வினா இலக்கம் | மொத்தப் புள்ளிகள் | மாணவர் பெற்ற புள்ளிகள் |
|---|---|---|
| 1 | 20 | |
| 2 | 20 | |
| 3 | 20 | |
| 4 | 15 | |
| 5 | 25 | |
| | | |

பெற்றோர்/பாதுகாவலர் கையொப்பம்:

1. **பின்வரும் பந்தியை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக. ( 20 புள்ளிகள்)**

தமிழர் காலங் காலமாக உயர்ந்த நாகரிகமும் சிறந்த பண்பாடும் உடையவர்களாக வாழ்ந்தனர். அவர்கள் தாம் வாழும் நிலப்பகுதியை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் பாலை என வகைப்படுத்தி வாழ்நதனர். கதிரவன், திங்கள், விண்மீன் ஆகியவற்றின் போக்கினை அறிந்து அதற்கேற்ப விழா எடுத்த பெருமை தமிழருக்கே உண்டு

தமிழர் தாங்கள் உயிர்த் தொழிலாகக் கருதி வந்த உழவுத் தொழிலின் பயன்தரு நாளாம் அறுவடைக் காலத்தின் ஒரு நாளை, தைத்திங்கள் முதல் நாளைப் பொங்கல் திருநாளாகக் கொண்டாடி மகிழ்ந்தனர். இதுவே தமிழரின் தலையாய பொது விழாவாகும்.

இன்றும் உலகெங்கும் வாழும் தழிழர், பொங்கல் திருநாளைத் தமிழர் திருநாளாகக் கொண்டாடி மகிழ்கின்றனர். இன்றும் தமிழருக்கென உரிய மயிலாட்டம், ஒயிலாட்டம், பொய்க்கால் குதிரையாட்டம், கரகம், வில்லுப்பாட்டுப் போன்ற கலைகளும் சிலம்பாட்டம், சடுகுடு, குத்துச் சண்டை எனும் தற்காப்புக் கலை விளையாட்டுக்களும் தமிழரின் பண்பாட்டுக்கு எடுத்துக் காட்டாக விளங்குகின்றன.

1.1 தமிழர் காலங்காலமாக எப்படி வாழ்ந்து வந்தனர்?

__________________________________________________

__________________________________________________

1.2 தமிழர் எதைக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனப்படும் பெயரிட்டு வகைப்படுத்தினர்?

__________________________________________________

__________________________________________________

1.3 தைப்பொங்கல் தமிழரின் தலையாய பொது விழாவாக கொள்ளப்படுவது ஏன்?

__________________________________________________

__________________________________________________

1.4 தற்காப்புக் கலையாக விளையாடும் விளையாட்டுக்கள் எவை?

__________________________________________________

__________________________________________________

1.5 ஒத்த சொல் தருக:

| | |
|---|---|
| கதிரவன் | |
| திங்கள் | |
| விண்மீன் | |

**2. பின்வரும் தொடர்வாக்கியங்களை மூன்று தனிவாக்கியங்களாக எழுது (20 புள்ளிகள்)**

2.1 காந்தி இங்கிலாந்து சென்று சட்டக்கல்வி பயின்று நாடு திரும்பியதும் அரசாங்கப்பணியில் ஈடுபட்டார்.

2.2 தாத்தா நிறைய செல்வம் தேடி, அதைப் பெட்டியில் பூட்டி வைக்காமல் இருந்து தான தருமங்கள் செய்தார்.

2.3 நான் தமிழ்ப்பாடசாலைக்குச் சென்று, தமிழ்மொழி வாழ்த்தும் பாடசாலைக் கீதமும் பாடி வகுப்பறைக்கச் சென்று பாடங்கள் படித்தேன்.

2.4 அப்பா வேலை செய்யும் இடத்திலிருந்து வீட்டிற்கு வந்து சிறிது நேரம் ஓய்வெடுத்த பின் சினிமாவிற்கு கூட்டிச் சென்றார்.

2.5 கண்ணகி தன் கணவன் கொலையுண்டான் என்பதைக் கேள்விப்பட்டு பாண்டியன் நெடுஞ்செழியனின் அரச சபைக்குச் சென்று தன் கணவன் கள்வன் அல்லன் என்பதை நிரூபித்தாள்.

3 **பின்வரும் சொற்களை வைத்து நான்கு சொற்களுக்கு குறையாமல் வசனம் எழுதுக. (20 புள்ளிகள்)**

3.1 விடுமுறை

---

3.2 திருமணவிழா

---

3.3 பூர்வீகம்

---

3.4 ஊடகவியலாளர்

---

3.5 வானிலை

---

3.6 காலநிலை

---

3.7 சாதனை

---

3.8 உழவர் திருநாள்

---

3.9 பாரம்பரிய உணவு

---

3.10 அன்பு

---

4 அவுஸ்திரேலியா வரவிருக்கும் உமது உறவினர் ஒருவருக்கு இங்கு பார்த்து மகிழக்கூடிய இடங்களை விபரித்து 50 சொற்களுக்கு குறையாமல் ஒரு கடிதம் எழுதுக. (15 புள்ளிகள்)

5 **பின்வருவனவற்றில் ஏதாவது ஒன்றைப்பற்றி 125 சொற்களுக்கு குறையாமல் ஒரு கட்டுரை எழுதுக. (25 புள்ளிகள்)**

5.1 நான் கண்ட பயங்கரமான கனவு

5.2 புலம் பெயர்ந்த நாடுகளில் தமிழ் ஊடகங்களின் பங்கு